**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 32/2020**

**வா.சா. 1 – ஏசுதாசன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 25.09.2025.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

வழக்கு பட்டிகை சொத்து நான் தற்போது வசிக்கும் வீட்டில் இருந்து எவ்வளவு கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சுமார் 5 கி.மீ. தூரம் இருக்கும். வழக்கு பட்டிகை சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 14 ½ சென்ட். வழக்கு பட்டிகை சொத்தின் பழைய சர்வே எண். என்ன என்றால் 2671. வழக்கு பட்டிகை சொத்தின் புதிய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்து நாகர்கோவில் கார்பரேஷனுக்கு உட்பட்டது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் டவுண் சர்வே எண். J1/83, 53 என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து யாருக்கு உரிமைப்பட்டது என்றால் எனது தாயாருக்கு உரிமைப்பட்டது. எனது தாயாருக்கு எவ்வாறு உரிமைப்பட்டது என்றால் விலைக்கு வாங்கினார். அதற்கான ஆவணங்கள் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயார் எப்போது காலஞ்சென்றார் என்றால் 1990 ம் வருடம். எனது தாயார் உயிருடன் இருக்கும் சமயத்தில் எனக்கோ 1 ம் பிரதிவாதிக்கோ எவ்வித ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

நான் வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக வழக்கு இந்த வழக்கை தவிர வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக வேறு ஒரு நபர் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கானது வழக்கு பட்டிகை சொத்தின் பெயரில் மூன்று செற்றில்மெண்ட் ஆவணங்கள் எழுதப்பட்டிருந்தது

அதனை ரத்து செய்யகோரி தாக்கல் செய்திருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி தான் மேற்படி வழக்கின் வாதி என்றால் சரிதான். மேற்படி வழக்கின் அ.வ.எண்.692/2005 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் என்ன தீர்ப்பானது என்றால் எனது தம்பிக்கு சாதகமான முடிவு பெற்று மூன்று செற்றில்மெண்ட் ஆவணமும் ரத்து செய்யப்பட்டது. வழக்கு பட்டிகை சொத்து எனக்கு உரிமைப்பட்டதாக நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் பட்டா எனது தம்பி 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வழக்கு பட்டிகை சொத்தின் பட்டா அல்லது கரத்தீர்வை ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலாது. நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு பட்டிகை சொத்தில் எனக்கு அவகாசப்பட்ட சொத்தை விற்ககூடாது என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பட்டிகை சொத்து எனது அனுபவத்தில் இருப்பதாக காட்டுவதற்கு எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து தற்சமயம் எனது தம்பி 1ம் பிரதிவாதியின் கைவசம் உள்ளது என்றால் சரியல்ல என்னுடைய அனுபவத்திலும் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்தின் இடையில் இருந்த சுவர் தற்போது இல்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்பு மேற்படி சுவர் இடிக்கப்பட்டதாக காட்டுவதற்கு நீதிமன்ற ஆணையர் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் உடல்நிலை சரியில்லாமல் இருந்தேன். குடும்ப ஏற்பாடு செய்ததாக கூறப்படும் நாள் தேதி தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

எனது சகோதர மற்றும் சகோதரி அவர்களுக்குரிய அவகாசத்தை 1ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.5 மூலமாக எழுதிக்கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 குடும்ப

ஏற்பாடு குறித்தோ எனது தாயார் ஏற்கனவே சொத்தினை பாகம் வைத்ததாகவோ எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து தற்போதும் ஒரே கிடப்பாகதான் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய அவகாசத்தை பரிகாரமாக கேட்பதற்கு நான் தனியாக பாகபிரிவினை செய்த பின் தான் கேட்க இயலும் இந்த வழக்கில் கேட்க இயலாது என்றால் சரியல்ல. குடும்ப ஏற்பாடு மூலம் எனக்கு ஒரு பாகம் உள்ளதாகவும் அதனை அனுபவித்து வருவதாகவும் கூறப்படுவது பொய் என்றால் சரியல்ல. வழக்கின் 1ம் பிரதிவாதி ஏற்கனவே வழக்கு சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்து வழக்கு சொத்து முழுவதும் அவர் கைவசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. 2006 ம் வருடமே வழக்கு பட்டிகை சொத்து அவர் கைவசம் சென்று பட்டா மாற்றி அவர் கைவசம் வைத்து முழுமையாக அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது தனிப்பட்ட அவகாசத்தில் வழக்கு பட்டிகை சொத்து இல்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**